

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,

“சிலப்பதிகாரம் - ஊர்காண் காதை”





தமிழ்







தொகுப்பு..

ஆசிரியர் : திரு. இ. அநூஷன் [National Dip.in.Teach]

(தொடர்புகளுக்கு 077-4323124)



க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,

சிலப்பதிகாரம் - ஊர்காண் காதை (15 - 61)

ஆசிரியர் :

சங்கமருவிய காலத்தில் எழுந்ததாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் **இளங்கோவடி**களால் எழுதப்பட்டது. **தொடர்நிலைச் செய்யுளாக** அமைந்த சிலப்பதிகாரம் **ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும்**. **இயல், இசை, நாடகம்** என மூன்றும் அமையுமாறு **கோவலன், கண்ணகி, மாதவி** ஆகியோரைப் பிரதான பாத்திரங்களாகக் கொண்டு எழுதப்பட்டதே சிலப்பதிகாரம் எனும் காப்பியமாகும். இக்காப்பியத்தில் **புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம்** என்ற பெரும் பிரிவுகளுக்குள் **முப்பது காதை**கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் **மதுரைக் காண்டத்தில் உள்ள ஒரு பகுதியே ஊர்காண் காதையாகும்**.

கதைத்தொடர்

கண்ணகியுடன் **மதுரை** சென்றடைந்த கோவலன், **புறஞ்சிறை மூதூரிலே** (மதுரையின் புற நகரில்) **கவுந்தியடிகளையும் கண்ணகியையும்** இருக்கவைத்துவிட்டு, தனது துன்பத்தையும் மதுரை நகருக்குள் செல்லும் எண்ணத்தையும் கவுந்தியடிகளிடம் வெளிப்படுத்தியபோது, கண்ணகியை அவருடன் விட்டுச் செல்வதில் துன்பமேது முண்டோ? என வினவுகின்றான். கவுந்தியடிகளும் **"அனைவரினதும் துன்பத்திற்குக் காரணம் அவரவர் தீவினைப் பயனே"** என ஆறுதல் கூறி, மதுரை நகர் சென்றுவருமாறு விடையளிக்கின்றார்.

கோவலன் சென்று, கொள்கையின் இருந்த
கவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி,
'நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி,
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த,
அறியாத் தேயத்து ஆரிடை யுழந்து,
சிறுமை யுற்றேன், செய்தவத் தீர்யான்:
தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
என்னிலை உணர்த்தி, யான்வருங் காறும்,
பாதக் காப்பினள் பைந்தொடி: ஆகலின்,
ஏதம் உண்டோ, அடிகள்! ஈங்கு?' என்றலும்
கவுந்தி கூறும்: "காதலி - தன்னொடு
தவந்தீர் மருங்கின் தனித்துயர் உழந்தோய்!
'மறத்துறை நீங்குமின் வல்வினை ஊட்டும்' என்று,
அறத்துறை மாக்கள் திறத்தின் சாற்றி,
நாக்கடிப்பு ஆக வாய்ப்பறை அறையினும்,
யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்

தீதுடை வெவ்வினை யுருத்த காலை,
பேதைமை கந்தாப் பெரும்பேது உறுவர்
ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலை,
கையாறு கொள்ளார் கற்றுஅறி மாக்கள்
பிரிதல் துன்பமும், புணர்தல் துன்பமும்,
உருவி லாளன் ஒறுக்கும் துன்பமும்,
புரிகுழன் மாதர்ப் புணர்ந்தோர்க்கு அல்லது,
ஒருதனி வாழ்க்கை உறவோர்க்கு இல்லை
பெண்டிரும் உண்டியும் இன்பம்என்று உலகில்
கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம்
கண்டனர் ஆகிக் கடவுளர் வரைந்த
காமஞ் சார்பாக் காதலின் உழந்து, ஆங்கு:
ஏமஞ் சாரா இடும்பை எய்தினர்
இன்றே அல்லால், இறந்தோர்பலரால்:
தொன்றுபட வரூஉம் தொன்மைத்து, ஆதலின்:
தாதை ஏவலின் மாதுடன் போகி,
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேதமுதல்வற் பயந்தோன் என்பது
நீஅறிந் திலையோ? நெடுமொழி அன்றோ?
வல்லாடு ஆயத்து, மண், அரசு, இழந்து:
மெல்லியல் - தன்னுடன் வெங்கான் அடைந்தோன்
காதலிற் பிரிந்தோன் அல்லன்: காதலி
தீதொடு படூஉம் சிறுமையள் அல்லள்:
அடவிக் கானகத்து ஆய் இழை - தன்னை
இடை இருள் யாமத்து இட்டு நீங்கியது
வல்வினை அன்றோ? மடந்தை - தன் பிழையெனச்
சொல்லலும் உண்டேல், சொல்லா யோ? நீ
அனையையும் அல்லை: ஆய் - இழை - தன்னொடு
பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே?
வருந்தாது ஏகி, மன்னவன் கூடல்:
பொருந்து உழி அறிந்து போது ஈங்கு" என்றலும்.

பொருள்:

தியானத்திலிருந்த கவுந்தியடிகளிடம் கோவலன் சென்று, கைதொழுது வணங்கி, "வாழ்வுப் பாதையைவிட்டுத் தவறியவர்களின் தன்மையுடையவனாய், மிகுந்த வாசனை பொருந்திய மலர் போன்ற

மேனியை உடையவளான கண்ணகி நடுங்கும் அளவு பெருந்துன்பம் அடைய, முன்னர் ஒருபோதும் அறிந்திராத நாட்டிலே துன்பமான பாதையிலே திரிந்து, யான் சிறுமை அடைந்தேன். தவம் செய்கின்றவரே, பழமை பொருந்திய இம்மதுரை நகரத்திலுள்ள வணிகர்களுக்கு என் நிலையினைக் கூறி, நான் மீண்டும் இங்கு வரும்வரையிலும் மென்மையான வளையல்களை அணிந்தவளான கண்ணகி உங்கள் பாதமாகிய காவலில் இருக்கட்டும். இதனால் தங்களுக்கு ஏதாவது இடைஞ்சல் உண்டோ?"என்று (கோவலன்) கேட்டதும், (அதனைக்கேட்ட) கவுந்தியடிகள் கூறுகிறார்: முன்னர் செய்த தவம் நீங்கிய நிலையில் காதலியோடு (கண்ணகி) பெருந்துன்பம் அடைந்தவனே! "அதர்ம வழியிலிருந்து விலகுங்கள் வலிமையுடையதான ஊழ்வினை அதன் பயனைத் தவறாது நமக்கு வழங்கும்" என்று அறவழியில் வாழும் துறவியர் உறுதியாகச் வொல்லி, நாவையே குறுந்தடியாகக் கொண்டு வாயாகிய பறையை அறைந்தாலும் மன உறுதியற்றோர் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

தீமையுடைய வெம்மையான வினையானது வந்து துன்புறுத்தும்போது, அறியாமை காரணமாகப் பெரிதும் மயங்கி வருந்துவார்கள். போக்க முடியாத வினையின் பயனை அனுபவிக்கும் காலத்திலும், கற்றவர்கள் செயலிழந்து வருந்தமாட்டார்கள். பிரிவுத்துயரமும் புணர்தல் சம்பந்தப்பட்ட துன்பமும் உருவமற்றவனாகிய மன்மதன் வந்து வருத்துகின்ற துயரமும் பெண்களைச் சேர்ந்து வாழ்பவர்க்கே உரித்தானவையன்றி, ஒப்பற்ற தனி வாழ்க்கை வாழும் உறுதியுடையோர்க்கு அவை ஒருபோதும் இல்லையாகும்.

'பெண்களும் உணவுமே இன்பம்' என்று நினைத்து இவ்வுலகிலே வாழ்வோர் முடிவில் அளவற்ற துன்பத்தையே காண்பார்கள். காமத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு காதலிலே உழன்று, அதன்பால் அமிழ்ந்து கரைகாண முடியாத துன்பத்தையே அவர்கள் அடைந்தனர். அன்று மட்டுமன்று இதற்கு முன்பும் இந்நிலையிலிருந்தவர்கள் பலராவர். தொன்று தொட்டு வருகின்ற பழமையினையுடையது இந்த அவலநிலையாகும்.

தன் தந்தையின் கட்டளைப்படி, மனைவியோடு காட்டிற்குச் சென்று அவளைப் பிரிந்தமையினால் துன்பத்தை அடைந்தவன் இராமன். அவன் வேத முதல்வனாகிய பிரமனைத் தன்னிடத்திலிருந்து படைத்தவன் (இராமன், விஷ்ணுவின் அவதாரம்) என்பதை நீ அறியாயோ? இது உலகறிந்த நீண்டகால வரலாறு அல்லவோ? சூதாட்டத்தில் ஈடுபட்டு மண்ணையும் அரசாட்சியையும் இழந்து, தன் மனைவியாகிய தமயந்தியுடன் கானகம் சென்ற நளன் காதலை விட்டு நீங்கியவனல்ல அவனது காதலி தமயந்தியும் குற்றமுடையவள் அல்ல. ஆராய்ந் தெடுத்த ஆபரணங்களை அணிந்தவளாகிய அவளை, அடர்ந்த காட்டிலே நடுச்சாமத்திலே விட்டு நீங்கியது வலிமை மிக்கதான ஊழ்வினையால் அல்லவோ? அதனை அவளது பிழை என்று சொல்ல முடியுமாயின் சொல்வாயாக.

இவ்வாறான துன்பங்களை மற்றவர்கள் அடைந்த போதிலும் அவர்களினின்று, நீ வேறுபட்டவனாய் நன்மையைப் பெற்றுள்ளாய். அது எதுவெனில், நீ உன் மனைவியை விட்டுப் பிரியாத வாழ்வைப் பெற்றுள்ளாய். அதனால் நீ வருந்தாதே. மதுரை நகருக்குச் சென்று இல்லறம் நடத்துவதற்கு ஏற்ற இடம் எது என அறிந்து, இங்கு வருவாயாக" என்றார்.

இராமன்

தன் தந்தையாகிய தசரதன் 14 ஆண்டுகள் வனவாசம் செல்லும்படி கூறினார் என்ற செய்தி கேட்ட இராமன் காட்டிற்குச் செல்ல ஆயத்தமானபோது, அவனுடன் கூடவே அவன் மனைவி சீதையும் சென்றாள். சீதையானவள் காட்டில் வைத்து இராவணனால் கடத்திச் செல்லப்பட்டாள். அவ்வேளை இராமன் தன் மனைவியான சீதையைப் பிரிந்திருந்தான். இராமன், விஷ்ணுவின் அவதாரம் என்பதும் வேத முதல்வனாகிய பிரமனைத் தன்னிடத்திலிருந்தே படைத்தவன் என்பதும் கூறப்படுகிறது.

நளன்

நளனும் தமயந்தியும் இனிய இல்லற வாழ்க்கை நடத்தி வரும் காலத்தில் நளனானவன் புட்கரனோடு சூதாட்டத்தில் ஈடுபட்டு நாடு, அரசாட்சி என்பவற்றை இழக்கின்றான். நளன் தனது மனைவியாகிய தமயந்தியுடன் கானகம் செல்கின்றான். அங்கு அவளைத் தனியே விட்டு, நளன் நீங்கி விடுகின்றான். சிறிது காலம் அவர்கள் பிரிந்து வாழ்கின்றனர்.

அரும்பதங்கள் :

காறு - அளவு

ஏதம் - குற்றம்

கையாறு கொள்ளார் - செயலிழந்து வருந்தார்

யாப்பறை மாக்கள் - உறுதியற்றோர்

தாதை - தந்தை

ஆயம் - கூட்டம்

மறத்துறை - பாவநெறி

ஒய்யா - போகக் வொணண்ா

உரவோர் - பெரியோர் / அறிஞர்

யாமத்து - சாமத்து (நடுச்சாமம்)

மேலதிக தகவல்களுக்காக.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள். நற்றிணைப் பாடல் கண்ணகி வரலாற்றைக் குறிப்பிடுகிறது. கண்ணகி விழாவுக்குச் சென்றிருந்த இலங்கை மன்னன் கயவாகு தன் நாட்டு இலங்கையில் எழுப்பப்போகும் கோயிலிலும் எழுந்தருளும்படி, கண்ணகி தெய்வத்தை வேண்டிக்கொள்கிறான். இந்தக் கயவாகு காலம் கி .பி.114-136. எனவே இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களின் காலம் கிஇரண்டாம் நூற்றாண்டு .பி..

இளங்கோவடிகள்.

இவர் இளவரசுப் பட்டத்தை விடுத்துத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்தன் அண்ணன் . செங்குட்டுவனுடன் மலை வளம் காணச் சென்றபோது, கண்ணகியைப் பற்றிய செய்தியை சீத்தலைச் சாத்தனார் எனும் புலவர் மூலமாக அறிந்தார் இளங்கோகண்ணகியின் கற்பொழுக்கமும் ., பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் நேர்மையும் அரசியல் நடுநிலைமையும் அவரை மிகவும் கவர, மூவேந்தர்களுக்கும் உரிய தமிழின் உயர் காவியமாக சிலப்பதிகாரத்தை கவிபுனைந்தார் அவர். சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி மற்றும் கோவலனின் துணைவி மாதவி ஆகியோரது வரலாற்றை விவரிக்கின்றதுஇதன் இரட்டைக் . காப்பியமாகத் திகழும் மணிமேகலை, ஆடலரசி மாதவியின் மகள் மணிமேகலையின் வரலாற்றை உரைக்கும் காவியமாகும்இதனை எழுதியவர் கூலவாணிகன் . சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் ஆவார்.

நூலமைப்பு.

காப்பியங்களுக்கான இலக்கண அமைப்பு அனைத்தும் பொருந்தி வரும்படி இயற்றப்பட்ட காப்பியமாகும்காவிரி ., வைகை முதலான ஆறுகளும் புகார், உறந்தை, மதுரை , வஞ்சி முதலான நகரங்களும், குரவைக் கூத்து முதலிய கூத்துகளும், திருமால் முதலிய தெய்வங்களும், அடர்ந்து வளர்ந்த பெருங்காடுகளும் இந்நூலில் நன்கு வர்ணிக்கப்பட்டுள்ளனஅக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றிய செய்திகள் இதில் . சிலப்பதிகாரப் பதிகம் இதனை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனக் .இடம் பெற்றுள்ளன குறிக◌ின்றதுபொருட்செறிவு .இடையிடையே உரைகளும் வரிப்பாட்டுகளும் கலந்து வந்துள்ளன .,

தெளிவான இனிய எளிய நடையுடன், அணிகள் பல பொதிந்த தமிழின் வளமான நூலாகும்இறையனார் . களவியல் உரைகாரர், இளம்பூரனார் போன்ற உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட பெருமை உடையதுதமிழற .ிஞர்களால் மிகுதியாக ஆய்வுக்கு உட்பட்ட நூல் இதுவேயாகும் சிலப்பதிகாரம் ., நூல் முகத்தில் உரைப் பாட்டினையும், கானல் வரி, வேட்டுவ வரி, ஆற்றுவரி, ஊசல்வரி, கண்புகுவரி என்னும் இசைப்பாட்டுகளும் நிறைந்தது .**புகார்க் காண்டம், மதுரைக் காண்டம் மற்றும் வஞ்சிக் காண்டம்** எனும் உட்பகுப்புகளால் பிரிக்கப்பட்டுள்ளது.

மதுரைக் காண்டம்.

இது 13 காதைகளைக் கொண்டதுஅவை .

1. காடு காண் காதை,
2. வேட்டுவ வரி,
3. புறஞ்சேரி இறுத்த காதை,
4. **ஊர் காண் காதை,**
5. அடைக்கலக் காதை,
6. கொலைக்களக் காதை,
7. ஆய்ச்சியர் குரவை,
8. துன்ப மாலை,
9. ஊர் சூழ் வரி,
10. வழக்குரை காதை,
11. வஞ்சின மாலை,
12. அழற்படுகாதை,

ஊர்காண் காதை.

புறஞ்சிறை மூதூரிலே, கவுந்தியும் கண்ணகியையும் தங்கியிருக்க வைத்துவிட்டுக் கோவலன் மதுரை நகருக்குள் சென்று அங்குள்ள செல்வர், அரசர் வீதி, எண்ணெண் கலையோர் வீதி, அங்காடி வீதி, இரத்தினக் கடைத் தெரு, பொன்கடை வீதி, அறுவை வீதி, கூல வீதி ஆகிய பல்வேறு வீதிகள் வழியாகச் சென்று அவற்றின் சிறப்புகளையும் கண்டு, மீண்டும் அவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து சேரும் செய்தியைக் கூறும் பகுதி இது.

கதை மாந்தர்கள்.

கண்ணகி - பாட்டுடைத் தலைவிகளங்கமற்ற பெண்ணொழுக்கத்தின் .கோவலனது மனைவி . .எடுத்துக்காட்டாகவும் கற்புநெறியின் அளவுகோலாகவும் படைக்கப்பட்டவள்"தெய்வம் தொழாள் கொழுனன் தொழுவாள்" என வள்ளுவர் உரைத்த மங்கைகணவன் போற்றா ஒழுக்கம் புரிந்தபோதும் அதை . க .மாற்றா உள்ள வாழ்கையே ஆனவள்ணவனுக்காக மதுரை மாநகரையே எரித்தவள்.

கோவலன் - பெரும் செல்வந்தர் மாசாத்துவானின் மகன்பிற ஒழுக்கங்கள் அனைத்தும் . .ஊழ்வினை காரணமாக உயிரிழந்தவன் .நிறைந்திருந்தாலும் மோகத்தால் அழிந்தவன்

மாதவி - பேரழகிகணிகையர் குலத்தோன்றலெனினும் கற்பு .ஆடற்கலையின் ஆழமுணர்ந்தவள் .நெறி வழுவாமல் கோவலனுக்கென்றே வாழ்ந்தவள்.மணிமேகலையின் தாய் .

ஆய்ச்சியர் குரவை.

ஆயர் சேரியிலே பல தீய நிமித்தங்கள் தோன்றின .குடத்திலிட்டு வைத்த பாலோ உறையவில்லை . .வெண்ணெயோ உருக்கவும் உருகாது போயிற்று .ஏற்றின் அழகிய கண்களிலிருந்து நீர் சொரிகின்றன ஆட்டுக்குட்டிகள் துள்ளியாடாவாய் .ஆநிரைகளின் கழுத்து மணிகள் நிலத்திலே அறுந்து வீழ்கின்றன

முடங◌்கிக் கிடக்கின்றனஅதனால் தீமை நேரும் என்று அஞ்சிய ஆயமகளிர்கள் ., தம் குலதெய்வமான கண்ணனை வேண்டிக் குரவைக் கூத்து ஆடுகின்றனர்.

குன்றக் குரவை.

திருச்செங்குன்றினைச் சேர்ந்த கண்ணகியாள், மலர் நிறைந்த ஒரு வேங்கை மரத்தின் அடியிலே சென்று நின்றனள், மதுரைமா தெய்வம் கூறியதைப் போலவே, கோவலன் இறந்ததன்பின் பதினான்கு நாட்கள் கழிந்திருந்தனவானுலகத்திலிருந்து தேவருடன் அவர் வர ., அவனுடன் அவளும் விமானம் ஏறி வானகம் நோக்கிச் சென்றனள்அவர்கள் அடந்த வியப்போ .அக் காட்சியைக் குறவர் குடியினர் கண்டனர் . அதனால்!பெரிது, அவனைத் தம் குலதெய்வமாகவே கொண்டு வழி பட்டுப் பணிந்து போற்றலாயினர்.

கானல் வரி.

கோவலனும் மாதவியும் யாழிசையுடன் சேர்ந்து கானல்வரிப் பாடல்களைப் பாடுகின்றனர் . இறுதியிலே, கோவலனின் மனம் மாறுகின்றது அவனுடைய ஊழ்வினை சினந்துவந்து அவன் பாற் சேரத் தொடங்கிற்றுமுழுநிலவினைப் போன்ற முகத்தின .ளான மாதவியை, அவளோடு கைகோத்து இணைந்து வாழ்ந்த தன் கைப்பிணைப்பை, அந்நிலையே நெகிழவிட்டவனும் ஆயினான்மாதவியுடன் செல்லாது ., தன் ஏவலாளர் தன்னைச் சூழ்ந்துவர, கோவலன், மாதவியைவிட்டுப் பிரிந்து, தான் தனியாகவே சென்று விட்டான் தன் .செயலற்ற நெஞ்சினளானாள் மாதவி .வண்டியினுள்ளே சென்றும் அமர்ந்தாள்காதலன் . தன்னுடன் வருதல் இல்லாமலேயே, தனியாகவே, தன்மனைச் சென்று புகுந்தாள்கானல் விழாவின் முடிவில் . ஊழ்வினை வந்து உருத்தது என்பதனைக் காட்டும் உருக்கமான .மன்னனை வாழ்த்தும் மரபும் பேணப்பட்டது .பகுதி இது

கதை.

காவிரிப்பூம்பட்டினத்து பெரு வணிகன் மாசாத்துவானின் மகன் கோவலன்இவன் கலையுணர்வும் ., வறியோர்க்கு உதவும் நற்பண்பும் மிக்கவன்காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாநாய்கனின் மகள் . இவள் திருமகள் போன்ற அழகும் .கண்ணகி, அழகிய பெண்கள் போற்றும் பெருங்குணச்சிறப்பும், கற்புத்திறமும் கொண்டவள்இவ்விருவரும் மனையறம் பூண்டு ., இன்புற்று வாழ்ந்தனர்.

கோவலன் ஆடலரசி மாதவியை விரும்பிக் கண்ணகியை விட்டுப் பிரிந்தான்அவன் மாதவி . மாதவி இந்திர விழாவில் கானல் வரிப் .இல்லத்திலேயே தங்கித் தன் செல்வத்தையெல்லாம் இழந்தான் பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்து கொண்ட கோவலன் .பாடலைப் பாடினாள், மாதவியை விட்டுப் பிரிந்தான், பிரிந்தவன் தன் மனைவி கண்ணகியிடம் சென்றான்தான் இழந்த செல்வத்தை ஈட்ட . வணிகம் செய்தற்பொருட்டு கண்ணகியுடன் .எண்ணினான் மதுரைக்குச் சென்றான்அவர்களுக்கு . வழித்துணையாகக் கவுந்தியடிகள்என்னும் சமணத் துறவியும் சென்றார்அவர் ., மதுரை நகர்ப்புறத்தில் மாதரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம் அவ்விருவரையும் அடைக்கலப்படுத்தினார்கோவலன் சிலம்பு விற்று . விலை மதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றை கோவலன் விற்பதைப் .வர மதுரை நகரக் கடை வீதிக்குச் சென்றான் பாண்டியமன்னனின் பொற்கொல்லன் அறிந்தான்.

“பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன்”, பொய்யான பழியைக் கோவலன் மேல் சுமத்தினான் அதனை ., “சிலம்பைக் கொணர்க” என்று ஆணையிட்டான்கோவலன் கொலை . செய்யப்பட்ட செய்தியை மாதரி மூலம் அறிந்த கண்ணகி; பெருந்துயருற்றாள் அவள் .தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை மன்னனுக்கும் உலகோர்க்கும் உணர்த்த எண்ணினாள்மன்னனின் அனுமதியோடு ., வாயிற்காவலன், கண்ணகியை பாண்டிய மன்னனிடம் அழைத்துச் சென்றான்மன்னன் கண்ணகியை . நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் நீ " நோக்கி, யார்?" என வினவினான்கண்ண .கி மன்னனை நோக்கி, "ஆராய்ந்து நீதி வழங்காத மன்னனேஉன்னிடம் கூறுவது ஒன்றொண்டு !” என உரைக்கத் தொடங்கினாள் .

புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும்", தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயர் அறிந்து தன் ஒப்பற்ற மகனையே தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும் வாழ்ந்த, பெரும்புகழுடைய புகார் நகரமே, யான் பிறந்த ஊர்" ."அப்புகார் நகரில் பழியில்லாத சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய மாசத்துவான் மகனை மணம் புரிந்தேன்" .

"வீரக்கழலணிந்த மன்னனே! ஊழ்வினைப் பயனால் வாழ்வதற்க்காக நின் மதுரை நகரத்திற்கு வந்து, என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி, நான்கண்ணகி . என்று " என்பது என் பெயர்கூறினாள்கள்வனைக் கொலை செய்தல் "பாண்டிய மன்னன் கண்ணகியிடம் . அதுவே அரச நீதி .கொடுங்கோலன்று" என்று கூறினான்அறநெறியில் செல்லாத " அதற்குக் கண்ணகி . என் காற்சிலம்பு !அரசனே, மாணிக்கப் பரல்களைக் கொண்டதுநீ கூறியது" அதற்கு அரசன் .என்றாள் ", நல்லதேஎம்முடைச் சிலம்பி !ன் பரல்கள் முத்துகளேகோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைத் .என்றான் " தருவித்து, அவள் முன் வைத்தான் .வைத்த அச்சிலம்பைனைக் கண்ணகி எடுத்து ஓங்கி உடைத்தாள் . .அதிலிருந்து வெளிப்பட்ட மாணிக்கப்பரல் ஒன்று பாண்டிய மன்னனின் உதட்டில்பட்டுத் தெறித்தது

அம்மாணிக்கப் பரல்களைக் கண்ட பாண்டிய மன்னன் தாழ்வுற்ற குடையனாய், சோர்வுற்ற செங்கோலனாய், "பொன் தொழில் செய்யும் கொல்லனின் பொய்யுரை கேட்டு, அறநெறி தவறிய, நானோஅரசன்அறந்தவறாது குடிமக்களைக் காக்கும் தொன்மையாட்சி என் முதல் .நானே கள்வன் ! என்றவ "என் வாழ்நாள் அழியட்டும் .தவறியது ாறே மயங்கி வீழ்ந்தான்மன்னனின் மனைவி . உள்ளங்கலங்கி, உடல் நடுங்கி, கணவனை இழந்த மகளிர்க்கு, எவ்விதத்திலும் ஆறுதல் கூற இயலாது என்று கூறித் தன் கணவனின் திருவடிகளை வணங்கி நிலத்தில் வீழ்ந்து இறந்தாள்.

கட்டுரையை மேம்படுத்துவதற்கான சில கருத்துக்கள்.

சிலப்பதிகாரம், அது எழுதப்பட்ட காலத்தில் இப்பகுதியில் போற்றப்பட்ட பல விழுமியங்கள், வழக்கங்கள் முதலியவற்றை நமக்குத் தருகிறதுஎட .ுத்துக்காட்டாக, கோவலனின் முடிவு அவன் மாதவியுடன் வாழச் சென்றதால் இருக்கலாம்அதாவது ., நடைமுறையில் பின்பற்றப்பட்டதோ இல்லையோ, கற்பொழுக்கம் என்பது அந்த காலகட்டத்தில் குறைந்தது ஒரு idealistic விழுமியமாக இருந்திருக்கும் . அதனால், இளங்கோ கோவலனுக்கு அம்மாதிரியான முடிவைத் தந்திருக்கலாம்மேலும் ., மன்னனுக்கான விழுமியமான நீதி தவறாமையைப் பற்றி நாம் பாண்டிய மன்னனின் முடிவின் மூலம் அறிகிறோம்மேலும் ., கதையின் பண்பாட்டுப் பின்புலம், ஆசிரியரின் வாழ்க்கைப் பின்புலம், தற்குறிப்பேற்ற அணி போன்ற அணிகளைக் கையாண்ட விதம், நடை போன்றவற்றைப் பற்றியும் எழுதினால் ஒரு நல்ல கட்டுரை உருவாகலாம் .

மாதிரி வினாக்கள்.

01. சிலப்பதிகார ஊர்காண் காதை பற்றி சிறுகுறிப்பு வரைக.
02. சிலப்பதிகாரம் எழுந்த காலப்பின்னனியை விளக்குக.
03. ஊர்காண் காதையில் இடம்பெறும் பாத்திரங்களை விபரிக்குக.
04. கோவலன் தன்னுடைய குற்றங்களாக குறிப்பிடுவனவற்றை விளக்குக.
05. கவுந்தியடிகளிடம் கோவலன் வேண்டிக்கொண்டது யாது?
06. கவுந்தியடிகள் அவலநிலைபற்றி யாது கூறுகிறார்?
07. கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூறிய ஆறுதல் வார்த்தைகள் எவை?
08. கவுந்தியடிகள் உதாரணம் காட்டிய இலக்கிய புருஷர்கள் யாவர்?, அவர்களுடாக கோவலனுக்குக் கூறவந்தவிடயம் யாது?
09. ஊழ்வினை என்றால் என்ன?
10. இப்பகுதியூடாக வெளிப்படும் ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பம்சங்கள் எவை?